**செய்தி வெளியீடு எண்: 271** **நாள் : 09.06.2014**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (9.6.2014) தலைமைச் செயலகத்தில், ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை மற்றும் தீப்புண் மருத்துவத் துறையில் சிறந்த சேவையாற்றி வரும் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள சைல்ட் டிரஸ்ட் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் கே. மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்களுக்கு 2014-ஆம் ஆண்டிற்கான அவ்வையார் விருதினை வழங்கினார்கள்.

சமூக சீர்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித் தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, கலாச்சாரம், பத்திரிகை, நிருவாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தொண்டாற்றும் பெண்களை கண்ணியப்படுத்தும் வகையில், ஒவ்வொரு ஆண்டிலும் இந்தத் துறைகளில் சிறப்புடன் பணியாற்றும் பெண்களில், ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அந்தந்த ஆண்டின் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி ‘‘அவ்வையார் விருது” எனும் உயரிய விருது வழங்கப்படும் என்றும், இந்த விருது பெறுபவருக்கு ஒரு லட்சம் ரூபாய் ரொக்கம், 8 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம், சான்றிதழ் மற்றும் பொன்னாடை ஆகியவை வழங்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதன்படி 2012–ஆம் ஆண்டு முதல் “அவ்வையார் விருது” மகளிர் தினத்தையொட்டி வழங்கப்பட்டு வருகிறது.

ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை மற்றும் தீப்புண் மருத்துவத் துறையில் சிறந்த சேவையாற்றி வரும் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள சைல்ட் டிரஸ்ட் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் கே. மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்களுக்கு 2014-ஆம் ஆண்டிற்கான அவ்வையார் விருது வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 4.3.2014 அன்று அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, சைல்ட் டிரஸ்ட் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் டாக்டர் கே. மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று அவ்வையார் விருதுடன் ஒரு

லட்சம் ரூபாய்க்கான காசோலை, **8** கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ் ஆகியவற்றை வழங்கி பொன்னாடை அணிவித்து பாராட்டினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து அவ்வையார் விருதினை பெற்றுக் கொண்ட டாக்டர் கே. மாதங்கி ராமகிருஷ்ணன் அவர்கள் தனது மருத்துவப் பணியை அங்கீகரித்து விருது வழங்கியமைக்காக தனது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சர் திருமதி பா. வளர்மதி, தலைமைச் செயலாளர் திரு மோகன் வர்கீஸ் சுங்கத், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறைச் செயலாளர் திரு பெ.மு. பஷீர் அஹமது, இ.ஆ.ப., சமூகநலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை இயக்குநர் திரு வி.எம். சேவியர் கிறிசோ நாயகம், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

நாள் : 9.6.2014